
# PONDICHERRY UNIVERSITY
# PUBLIC RELATIONS WING

## NEWS PAPER CLIPPINGS

DINAMALAR DATED 14.05.2025

# பாரதிய ஜனன பரம்பரா உபன்யாச மாலா துவக்கம்




புதுச்சேரி, பல்கலைக்கழகத்தில், பாரதிய ஜனன பரம்பரா உபன்யாச மாலா துவங்கப்பட்டுள்ளது.

**புதுச்சேரி, ஏப். 14–**

புதுச்சேரி, பல்கலைக்கழகத்தில், பாரதிய ஜனன பரம்பரா உபன்யாச மாலா துவங்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகத்தின் ஆனந்த ரங்கப்பிள்ளை நூலகம் மற்றும் தமிழ்நாடு வித்யா பாரதி உச்ச சிக் ஷா சன்ஸ்தான் ஆகிய இரு நிறுவனங்கள் இணைந்து பாரதிய ஜனன பரம்பரா உபன்யாச மாலா (இந்திய அறிவு முறை விரிவுரைத் தொடர்) துவங்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் பண்டைய அறிவுசார் பாரம்பரியத்தை மீட்டெடுத்து, சமகால கல்வி மற்றும் சமூக சூழல்களுடன் ஒருங்கிணைப்பதன் மூலம் புதுமையாக உயிர்ப்பிக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்துவதே இதன் நோக்கமாகும்.

விழாவில், பல்கலைக்கழக நூலகர் விஜயகுமார் வரவேற்றார். பேராசிரியர்கள் கிளமென்ட் லூர்து, தரணிகரசு ஆகியோர் ‘உள்நாட்டு அறிவை நவீன கல்வியில் ஒருங்கிணைப்பதன் முக்கியத்துவம் குறித்தும்,உபன்யாச மாலா, துறை வாரியான உரையாடல்களுக்கு மேடையாக அமையும் என்றனர்.

டில்லி, இந்திய தத்துவ ஆராய்ச்சி கவுன்சிலின் உறுப்பினர் சம்பத் குமார், இந்திய தத்துவ மரபுகளின் ஆழம், பன்முகத் தன்மை மற்றும் அவற்றை கல்விக்குழுமங்களில் கொண்டு வருவதற்கான அவசரத் தேவை குறித்தும், தத்துவ ஆராய்ச்சி கவுன்சில் மேற்கொண்டு வரும் முயற்சிகள் குறித்தும் பேசினார்.

# PONDICHERRY UNIVERSITY
# PUBLIC RELATIONS WING

## NEWS PAPER CLIPPINGS

DINAMALAR DATED 14.05.2025



■ மாகே, ஏனாமில் புதுச்சேரி பல்கலைக்கழகம் சார்பில் சமுதாயக் கல்லூரி அமைக்க இடம் வழங்கக்கோரி முதல்வர் ரங்கசாமியை துணை வேந்தர் பிரகாஷ் பாபு சந்தித்து பேசினார். அருகில் சபாநாயகர் செல்வம், அமைச்சர்கள் லட்சுமி நாராயணன், திருமுருகன், பல்கலைக்கழக (கல்வி) இயக்குனர், தரணிக்கரசு, கணேஷ்.

# முதல்வருடன் துணைவேந்தர் சந்திப்பு

**புதுச்சேரி, மே 14–**

முதல்வர் ரங்கசாமியை பல்கலைக் கழக துணைவேந்தர் சந்தித்து பேசினார்.

மத்திய அரசின் கல்வி அமைச்சகத்தின் கீழ், மாகியில் புதுவை பல்கலைக்கழக சமுதாயக் கல்லூரி நிரந்தர வளாகம் அமைப்பட உள்ளது. இதற்காக நிலம் ஒதுக்கீடு செய்யவும், மேலும் மற்றொரு பிராந்தியமான ஏனாமில் புதுச்சேரி பல்கலைக் கழக சமுதாயக் கல்லூரியை நிறுவவும், புதுச்சேரி பல்கலைக் கழக துணை வேந்தர் பிரகாஷ் பாபு முதல்வர் ரங்கசாமியை சந்தித்து கேட்டுக்கொண்டார். சபாநாயகர் செல்வம், அமைச்சர்கள் லட்சுமி நாராயணன், திருமுருகன், பல்கலைக்கழக (கல்வி) இயக்குனர் தரணிக்கரசு, கணேஷ் உடனிருந்தார்.

# PONDICHERRY UNIVERSITY
# PUBLIC RELATIONS WING

## NEWS PAPER CLIPPINGS

MAALAI MALAR DATED 14.05.2025

### புதுவை பல்கலைக்கழகத்தில்

# பண்டைய அறிவுசார் விரிவுரை

புதுச்சேரி, ஏப்.14—

புதுவை பல்கலைக் கழகத்தில், பாரதிய ஜனன பரம்பரா உபன்யாச மாலா இந்திய அறிவு முறை விரிவுரைத் தொடர் தொடங்கப்பட்டுள்ளது.

**உபன்யாச மாலா**

பல்கலைக்கழகத்தின் ஆனந்த ரங்கப்பிள்ளை நூலகம் மற்றும் தமிழ்நாடு வித்யா பாரதி உச்ச சிக்ஷா சன்ஸ்தான் ஆகிய 2 நிறுவனங்கள் இணைந்து பாரதிய ஜனன பரம்பரா உபன்யாச மாலாவை தொடங்கியுள்ளனர்.

இந்தியாவின் பண்டைய அறிவுசார் பாரம்பரியத்தை மீட்டெடுத்து, சமகால கல்வி மற்றும் சமூக சூழல்களுடன் ஒருங்கிணைப்பதன் மூலம் புதுமையாக உயிர்ப்பிக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்துவதே இதன் நோக்கமாகும். பல்கலைக்கழக நூலகர் விஜயகுமார் வரவேற்றார்.



பேராசிரியர்கள் கிளமென்ட் லூர்து, தரணிகரசு ஆகியோர் 'உள்நாட்டு அறிவை நவீன கல்வியில் ஒருங்கிணைப்பதன் முக்கியத்துவம் குறித்தும், உபன்யாச மாலா, துறை வாரியான உரையாடல்களுக்கு மேடையாக அமையும் என்று தெரிவித்தனர்.

டெல்லி, இந்திய தத்துவ ஆராய்ச்சி கவுன்சிலின் உறுப்பினர் சம்பத்குமார், இந்திய தத்துவ மரபுகளின் ஆழம், பன்முகத் தன்மை மற்றும் அவற்றை கல்விக் குழுமங்களில் கொண்டு வருவதற்கான அவசரத் தேவை குறித்தும், தத்துவ ஆராய்ச்சி கவுன்சில் மேற்கொண்டு வரும் முயற்சிகள் குறித்தும் பேசினார்.

துணைவேந்தர் பிரகாஷ்பாபு, அறுவை சிகிச்சையின் தந்தை என போற்றப்படும் சுஸ்ருதாவின் பங்களிப்பு குறித்து பேசினார்.

முடிவில் டாக்டர் சஞ்சய் பிரதாப்சிங் நன்றி கூறினார்.

# PONDICHERRY UNIVERSITY
# PUBLIC RELATIONS WING

## NEWS PAPER CLIPPINGS

DAILY THANTHI DATED 14.05.2025



### லாஸ்பேட்டை ஹெலிபேட் மைதானத்தில்

# சமுதாய கல்லூரி மாணவர்கள் துப்புரவு பணி

புதுச்சேரி, ஏப்.14-

லாஸ்பேட்டை பல்கலைக்கழக சமுதாய கல்லூரியில் படிக்கும் 2-ம் ஆண்டு மாணவர்கள் புதிய கல்வி கொள்கையின் அடிப்படையில் சமுதாய ஈடுபாடு என்ற திட்டத்தின் ஒரு பகுதியாக, உழவர்கரை நகராட்சியுடன் இணைந்து லாஸ்பேட்டை ஹெலிபேட் மைதானத்தில் துப்புரவு பணியை கடந்த 2 நாட்களாக மேற்கொண்டனர். இந்த துப்புரவு பணியை நகராட்சி ஆணையர் சுரேஷ்ராஜ் தொடங்கி வைத்தார். இதில் மாணவர்கள் மைதானத்தில் கிடந்த பிளாஸ்டிக் கழிவுகளை அகற்றினர்.

இதில் கல்லூரியின் முதல்வர் லலிதா ராமகிருஷ்ணன், ஆங்கிலத்துறை பேராசிரியர்கள் சுஜரிதா, இந்துமதி, வசந்தா கோகிலம், வணிகவியல் துறை பேராசிரியர் பாண்டு மற்றும் நிர்வாக பணியாளர் செல்வம் ஆகியோர் கலந்து கொண்டனர்.